J - 2012

# 1310

Register Number | | | | | |

## பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

( உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன் )

## Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக : 3 × 4 = 12

1. இசைத்தமிழ் என்பது யாது ? முற்காலத்தும் இக்காலத்தும் விளங்கும் இசைத்தமிழ் நூல் வகைகள் யாவை ?
2. தமிழ் மொழியின் மீது பற்றுக் கொள்ளாத தமிழ் மக்களைப் பரிதிமாற் கலைஞர் கடித்துரைப்பது யாங்ஙனம் ?
3. சாதிக் கொடுமை, சமயவெறி முதலியன சமரச உணர்வைக் குலைப்பனவாம் - இக்கருத்தைத் திரு.வி.க. வழி நின்று ஆய்க.
4. கவிதைக்குரிய நல்லியல்புகளைக் கம்பன் உரைக்குமாறு யாங்ஙனம் ?
5. அக்காலத்துக் கல்வியே சிறந்ததாக இளவழகனார் கருதுவதற்குக் காரணங்கள் யாவை ?

www.kalvisolai.com

[ Turn over

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை தருக : 3 × 4 = 12

6. அறுமுறை வாழ்த்து - விளக்குக.

7. நீதி நூல்களின் பொதுவான இயல்பினைக் குறித்து எழுதுக.

8. ஒரு படி முன்னேற்றம் என்று மு. வ. உரைப்பது யாது ?

9. தமிழகக் குடைவரைக் கோவில்களைப் பற்றி எழுதுக.

10. செப்புத் திருமேனிகளின் பொற்காலம் எது ? ஏன் ?

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் இருபது வரிகளின் மிகாது விடை எழுதுக : 1 × 6 = 6

11. நம் தமிழ்மாந்தர் கடைப்பிடித்து ஒழுகிய ஒற்றுமை உணர்வும் ஈகையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

12. வயிற்றுப் பெருமான் பொருட்டு மக்கள் செய்யும் செயல்களாக அறநெறிச்சாரம் கூறுவன யாவை ?

www.kalvisolai.com

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக : 2 × 10 = 20

13. *'மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து'* அல்லது *'பால்வண்ணம் பிள்ளை'* என்னும் சிறுகதையின் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

*அல்லது*

*'சட்டை'* அல்லது *'வேலி'* என்னும் சிறுகதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. *'ஒவ்வாரு கல்லாய்'* அல்லது *'பழிக்குப்பழி'* என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

*அல்லது*

கோமதி மருமகளை வேறுபாடு கருதாமல் அன்பு பாராட்டி ஏற்றுக் கொண்டதாகக் கற்பனையாக ஒரு கதை எழுதுக.

*அல்லது*

சொந்தவீடு கட்டிக்கொள்ளக் கடன் வாங்கி அல்லல்பட்ட இருவர் சந்தித்து உரையாடுவது போல் நும் கற்பனையிலிருந்து ஒரு கதை எழுதுக.

www.kalvisolai.com

[ Turn over

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. 1 × 10 = 10

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளிப்
பிறமொழிக்குச் சிறப்பளித்த பிழையை நீக்க
உற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
வுலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ

கற்றுணர்ந்தே அதன் இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டி
தெற்றெனநம் அகக் கண்ணைத் திறந்துவிட்ட
தெய்வக்கவி பாரதி ஓர் ஆசான் திண்ணம்.

கண்ணிரண்டில் ஒரு கண்ணைக் காத்தாற் போலும்
கைகால்கள் இரண்டிலொன்றைக் கழித்தாற் போலும்
பெண்ணினத்தை ஆணினத்திற் குறைந்ததாகப்
பேசிவந்த நீச குணம் பெரிதும் நீங்கப்

பண்ணிசைக்கும் மிகப்புதுமைக் கவிகள் பாடிப்
பாவையரைச் சரிநிகராய்ப் பாராட்டும் நல்
எண்ணமதை நம் மனத்தில் இருக்கச் செய்த
ஏற்றத்தால் பாரதி ஓர் ஆசான் என்பேன்.

– நாமக்கல் கவிஞர்

குறிப்பு : **காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் கீழ்க்கண்ட VI மற்றும் VII வினாக்களுக்கு மாற்று வினா வழங்கப்பட்டுள்ளன.**

VI. பின்வரும் தொடர்களில் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் தமிழாக்கம் தருக. 3 × 2 = 6

16. Art is long and life is short.
17. Knowledge is power.
18. A friend in need is a friend indeed.
19. Everybody thinks alike.
20. Education should develop and promote goods values.
21. Face is the index of the mind.

www.kalvisolai.com

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் **பத்து** வரிகளில் எழுதுக. 1 × 4 = 4

அ) ''வாய்மையே வெல்லும்''

ஆ) ''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''

இ) ''இளமையில் கல்''

*அல்லது*

'*அந்திமாலை*' அல்லது '*எழுச்சி மிகு பாரதம்*' என்னும் தலைப்பில் உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை எட்டு அடிகளுக்கு குறையாது பத்து அடிகளுக்கு மிகாது எழுதுக.

*குறிப்பு :* காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா

VI மற்றும் VII-ல் உள்ள வினாக்களுக்குப் பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியை கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் 16 முதல் 22 வரையில் உள்ளவற்றில் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் உகந்த விடையை எழுதுக. 5 × 2 = 10

இன்றைய பட்டதாரிகளிடம் அறிவுதாகம் குறைந்துவரும் அவலநிலை உள்ளது. இவர்கள் படிக்கும் போதே பாடநூல்களை ஓரங்கட்டி குறிப்பேடுகளைத் தவறாமல் வாங்கிப் படித்தவர்கள். இதனால் மூல நூல்கள் தூசி படிந்து கிடக்கின்றன. தங்கள் துறைகளைச் சார்ந்த நூல்களையாவது படிக்க வேண்டும். தரக்குறைவான இதழ்களைப் படிப்பதை ஒதுக்க வேண்டும். சுயநலத்திலும், திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி ஆகிய கவர்ச்சிகளில் நம்மை இழந்து விடக்கூடாது.

www.kalvisolai.com

இந்த நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஒரு வியட்நாம் கவிஞன் அடிமையானது பற்றி எழுதுகின்றான். பிரெஞ்சுக்காரரின் ஆயுதங்கள் எங்களை அடிமைப்படுத்தின. ஆனால் அவர்களின் நாட்டு நூல்கள் எங்களுக்கு விடுதலை பெற்றுத் தந்தன என்பது அக்கவிஞனது கூற்று. டால்ஸ்டாய் தம் பதினைந்தாவது வயதில் ஒருநாள் நூலகத்தில் ரூசோவின் சமுதாய ஒப்பந்தம் என்ற நூலைப் படித்தார். அன்று முதல் ரூசோவின் உருவம் தாங்கிய பதக்கத்தைப் பெருமையுடன் தமது கழுத்தில் அணிந்து கொண்டார். ஆகையால் பட்டதாரிகள் ஓய்வு நேரங்களில் நூலகம் நோக்கிச் செல்ல வேண்டும்.

*வினாக்கள் :*

16. இன்றைய பட்டதாரிகளிடம் குறைந்து வருவது எது ?

17. தூசி படிந்து கிடப்பவை யாவை ?

18. ஒதுக்க வேண்டியது எது ?

19. வியட்நாம் கவிஞன் எழுதியது என்ன ?

20. சமுதாய ஒப்பந்தம் என்ற நூலை எழுதியவர் யார் ?

21. ரூசோவின் உருவம் தாங்கிய பதக்கத்தை பெருமையுடன் அணிந்து கொண்டவர் யார் ?

22. பட்டதாரிகள் ஓய்வு நேரங்களில் என்ன செய்ய வேண்டும் ?

www.kalvisolai.com

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக : 10 × 1 = 10

23. மாணவர்கள் கல்வியறிவு ஒழுக்கத்திற் சிறந்து விளங்க வேண்டும்.

( தொடரில் உள்ள வாக்கியப் பிழையைத் திருத்துக )

24. வெந்தய செடிகளின் மேல் மின்னிடும் தங்க பூக்கள்

( ஏற்ற இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக )

25. வெண்ணிலாக் கலக்கலவென்றுச் சிரித்தாள்.

( தேவையற்ற இடங்களில் அமைந்த வல்லின மெய்களை நீக்கி எழுதுக )

26. 'டி.வி.யில் சீரியல் பார்க்காவிட்டால் லைஃபே போர் அடித்துவிடும்' என்கிறாள் பாட்டி.

( ஆங்கிலச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக )

27. காகம் கத்த குயில் சத்தமிட கழுதை கத்தியது.

( மரபு வழூஉச் சொற்களை நீக்கி திருத்தமாக எழுதுக )

28. வாளை இழை பரித்து வந்து விருந்தினர்க்குப் பறிமாற வேண்டும்.

( எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக )

29. 'பனி' - 'பணி' அல்லது 'வேலை' - 'வேளை'

( சொற்களின் பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக )

www.kalvisolai.com

30. ஒருத்தன் ஒண்டியாய்ப் போனால் அது ஊர்கோலமா ?

( கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக )

31. 'ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் நாமகரணத்தை இந்தக் கப்பலுக்குச் சூட்டுவதில் ஸந்தோஷமடைகிறேன்' என்றார், மூதறிஞர் இராஜாஜி.

( வடசொற்கலப்பை நீக்கி நல்ல தமிழில் எழுதுக )

32. எச்சபை பொதுவென இயம்பினர் அறிஞர்கள் அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ்சோதி என்று சுவாமிகள் அருளிச் செய்துள்ளார்

( பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக).

www.kalvisolai.com